பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
22 11 2025 **SATURDAY 7 15 AM**
ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தென்னாப்பிரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆன்டனி அல்பனிஸை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

2. இந்தியாவில் தொழிலாளர்களின் நலனுக்காக, நான்கு புதிய சட்டங்கள் அமலுக்கு வந்துள்ளதை சர்வதேச தொழிலாளர் அமைப்பு வரவேற்றுள்ளது.

3. கேரள உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 427 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

4. மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியின் தேசிய தலைவராக திரு. தேவே கவுடா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

5. உலக கோப்பை மகளிர் கபடி போட்டியில் இந்தியா 51-16 என்ற புள்ளிக்கணக்கில் உகாண்டா அணியை வென்றது.

>>>>><<<<<

ஜி.20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக, தென்னாப்பிரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, ஜோகன்னஸ்பர்க் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

புலம்பெயர்ந்த இந்தியர்கள், பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் பிரதமரை வரவேற்றனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆன்டனி அல்பனிஸை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

முக்கியமான துறைகளில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையே ஒத்துழைப்பு குறித்து இருவரும் விவாதித்தனர்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இந்த கருத்தை பதிவு செய்துள்ள அவர். இருநாடுகளுக்கு இடையே உத்திசார் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏற்பட்டு, இந்த ஆண்டுடன் ஐந்தாண்டுகள் நிறைவு பெறுவதை குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுக்களின் போது, பாதுகாப்பு, அணுசக்தி, வர்த்தகம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கு இடையே இணைந்து செயல்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளதை தாம் குறிப்பிட்டதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கல்வி, கலாச்சார பரிமாற்றம் தொடர்பாகவும் ஆஸ்திரேலிய பிரதமருடன் விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், வெளியுறவுத்துறை விடுத்துள்ள ஒரு அறிக்கையில், இந்தியா - ஆஸ்திரேலியா இடையே பல்வேறு துறைகளில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பு குறித்து இருதலைவர்களும் திருப்தி தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது.

சமீபத்தில் தில்லியில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலை குறிப்பிட்ட ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆன்டனி அல்பனிஸ், தீவிரவாதத்திற்கு எதிரான உலகம் தழுவிய நடவடிக்கையை பலப்படுத்த வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

>>>>><<<<<

இந்தியாவில் தொழிலாளர்களின் நலனுக்காக, நான்கு புதிய சட்டங்கள் அமலுக்கு வந்துள்ளதை சர்வதேச தொழிலாளர் அமைப்பு வரவேற்றுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. Gilbert Fhoungbo விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், தொழிலாளர் சட்டங்களில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், தொழிலாளர்களுக்கும். வணிக நிறுவனங்களுக்கும் சாதகமாக அமைவதை உறுதி செய்வது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டங்கள், சமூக பாதுகாப்பு மற்றும் குறைந்தபட்ச ஊதியம் தொடர்பான முன்னேற்றங்களை ஆர்வத்துடன் கவனித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் புதிய சட்டங்கள் தொடர்பாக அரசு, தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்கள் இடையே கலந்துரையாடல் அவசியம் என்றும் திரு. Gilbert Fhoungbo வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய மோதல்களை கையாள்வதற்கு புதிய ஐ.நா சபை மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்பு அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

லக்னோவில் நேற்று நடைபெற்ற உலக தலைமை நீதிபதிகளின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் இதனை தெரிவித்தார்.

இஸ்ரேல் – ஹமாஸ், யுக்ரைன் – ரஷ்யா இடையிலான போர் மற்றும் சூடானில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி போன்றவற்றில் ஐ.நா சபை இன்னும் வலுவாக பங்காற்றியிருக்க முடியும் என்று அவர் கூறினார்.

ஐ.நா நடவடிக்கையில் உள்ள இந்த இடைவெளி. அதன் நோக்கத்தின் குறைபாட்டினால் அல்ல என்றும், மாறாக, உலக அரசியல் சிக்கல்கள் வளர்ந்த நாடுகளின் ஆதிக்கம் ஆகியவையே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் சமச்சீரான பிரதிநிதித்துவம் காலத்தின் கட்டாயம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

துபாயில் நடைபெற்று வரும் விமான கண்காட்சியில் பங்கேற்ற இந்திய விமானப்படைக்குச் சொந்தமான தேஜஸ் போர் விமானம், நேற்று விபத்துக்குள்ளானது.

இந்த விமானம், சாகச நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது, இந்த சம்பவம் நடைபெற்றது.

இந்த துயர சம்பவத்தில் விமானத்தை இயக்கிய விங் கமாண்டர் Namansh Syal உயிரிழந்தார் என்று இந்திய விமானப்படை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

விபத்துக்கான உண்மையான காரணத்தை கண்டறிய, விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உயிரிழந்த விமானியின் குடும்பத்தினருக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியின் தேசிய தலைவராக திரு. தேவே கவுடா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பெங்களூரில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் தேசிய கவுன்சில் கூட்டத்தில் அவர் தேர்வு செய்யப்பட்டதாக கட்சியின் அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநில தலைவராக திரு. எச்.டி. குமாரசாமி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

கேரளாவில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 427 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், அதிகபட்சமாக மலப்புரம் மாவட்டத்தில் 19 ஆயிரத்து 959 மனுக்களும், குறைந்தபட்சமாக வயநாடு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 227 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கேரளாவில் மாநகராட்சிகள், நகராட்சிகள், கிராமப் பஞ்சயத்துக்கள், மாவட்ட பஞ்சாயத்துக்கள் மற்றும் ஒன்றியங்களுக்கும் அடுத்த மாதம் 9ஆம் தேதியும், 11ஆம் தேதியும் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

குஜராத்தில் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் இரண்டு பேருக்கு 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து, Kapadvanj நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர்கள் இருவரும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை வைத்திருந்ததாக கடந்த 2023ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள், சிறுநீரக செயலிழப்பு மற்றும் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான செயற்கை ஊக்கமருந்து என்று தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மகளிரை பொருளாதார ரீதியாக தன்னிறைவு மிக்கவர்களாக மத்திய அரசு மாற்றி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மகளிர் மத்திய அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் வழங்கும் பயிற்சியில்

*பங்கேற்று, தொழில் முனைவோராக மாறி வருவதாக மாவட்ட திட்ட அலுவலர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – ஜெய்சங்கர் 21 செகண்ட்ஸ்)*

*இங்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குடும்பத்தின் வருமானத்தை பெருக்க உதவுவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – பயனாளி 34 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*இலங்கையில் நேற்று எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, மக்கள் குரல் என்ற பெயரில் பேரணி ஒன்றை நடத்தின.*

*கொழும்பில் நடைபெற்ற இந்த பேரணியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெருமுனா மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் கலந்து கொண்டன.*

*தற்போதைய அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*இருப்பினும், பிரதான எதிர்க்கட்சியான திரு. சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி மற்றும் கூட்டணிக் கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவை இந்த பேரணியில் பங்கேற்கவில்லை.*

*>>>>><<<<<*

*உலக கோப்பை மகளிர் கபடி போட்டியின் நான்காவது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று இந்தியா 51-16 என்ற புள்ளிக்கணக்கில் உகாண்டா அணியை வென்றது.*

*டாக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா ஏற்கனவே, தாய்லாந்து, பங்களாதேஷ் மற்றும் ஜெர்மனி அணிகளை தொடர்ச்சியாக வென்றது குறிப்பிடத்தக்கது.*

*>>>>><<<<<*

*இந்திய மகளிர் ஓப்பன் ஸ்குவாஷ் இறுதிப்போட்டியில் அனாகத் சிங் இன்று ஜோஷ்னா சின்னப்பாவை எதிர்கொள்கிறார்.*

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அனாகத் சிங் 11-4, 10-12, 9-11, 11-6, 11-4 என்ற செட்கணக்கில் அயர்லாந்தின் Hannah Craig-ஐ வென்றார்.

மற்றொரு அரையிறுதியில், ஜோஷ்னா சின்னப்பா 7-11, 11-5, 11-7, 11-7 என்ற எகிப்தின் Nadien Elhammamy-ஐ வென்றார்.

>>>>><<<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டி இன்று அஹமதாபாதில் தொடங்குகிறது.

இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறும் இப்போட்டியில் இந்தியா – பாலஸ்தீன அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று குவஹாத்தியில் தொடங்குகிறது.

ஏற்கனவே கொல்கத்தாவில் நடைபெற்ற முதல் போட்டியில், தென்னாப்பிரிக்கா வெற்றிபெற்று 1-0 என்ற புள்ளிக்கணக்கில் முன்னணியில் உள்ளது.

>>>>><<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று தைவானின் Chou Tien Chen-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>END<<<<<